செ.வெ.எண்: 780 நாள்: 23/12/2011

# பத்திரிக்கை செய்தி

## எழும்பூர் கோ—ஆப்டெக்ஸ் திடலில் கைத்தறி துறை அமைச்சர் ஆய்வு

சென்னை, எழும்பூர், பாந்தியன் சாலை கோ—ஆப்டெக்ஸ் கைத்தறி விற்பனை வளாகத்தில் அமைந்துள்ள கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மற்றும் பிரதம கைத்தறி பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் விற்பனை நிலையங்கள் அனைத்திற்கும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், மருத்துவர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் 23.12.2011 அன்று காலை வருகை புரிந்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

விற்பனையாளர்களிடம் விற்பனை, வாடிக்கையாளர்களின் வருகை மற்றும் விற்பனையை அதிகரிக்க செய்யத் தேவையான நடவடிக்கை பற்றி ஆய்வு செய்தார்கள்.

விற்பனை நிலைய ஊழியர்கள் வாடிக்கையாளர்களை கவரும் வண்ணம் அன்புடனும் கனிவுடனும் வரவேற்று அவர்களுடைய தேவையை பூர்த்தி செய்து விற்பனையை அதிகரிக்க வேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

கோ—ஆப்டெக்ஸ்.

PR-PRESS-22.12.11(K)

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9